Koviloor Digital Library

விநாயகர் அகவல்

தெளிவுரை

Acc.No. 34547

Koviloor Digital Library

Koviloor Digital Library

312

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 34547

உ

சிவகுரு

திருச்சிற்றம்பலம்

எல்லாம் வல்ல முழுமுதற் பரம்பொருள் ஸ்ரீ விநாயகர் மூர்த்தமாக எழுந்தருளி அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்த் தனது பேரருள் ஒளியைப் பரப்பிக் கொண்டிருக்கிறது.

கால எல்லையைக்கடந்து, தேசங்களின் எல்லையைக் கடந்து ஸ்ரீ விநாயகப்பெருமான் சிறுவர்கள் முதலாக மூத்தோர்கள் ஈறாக அனைவரையும் ஈர்த்தருளுகிறார். எத்தனைக் கற்பனைகள் செய்தாலும் கடவுளுக்கு இவ்வளவு முழுமையான திருவுருவை எண்ணி இயற்றியிருக்க முடியாது. கணினிகளின் கணக்கையும் அது தாண்டும். மனித, பூத, தேவர் உடம்பில் ஒருங்கே தோன்றி அத்தனைச் ஜீவராசிகளையும் காப்பாற்றுகிறார். எளிய வழிபாடுகளை ஏற்கிறார். திறந்த வெளி, மரத்தடி என்று பார்ப்பதில்லை, வெள்ளைத்துண்டு ஒன்றைப் படைத்தாலும், அதனை விரும்பி ஏற்கிறார். சாணமாயினும் சரி, சந்தனமாயினும் சரி அதில் அவரை அமருங்கள் என்றால் மகிழ்ந்து அமர்ந்து கொள்கிறார். இவருக்கு ஆகமமும் வேண்டா. அன்பு ஒன்றே வழிபாடு. ஆகையால் அனைத்துலகப் பகுதிகளிலும் வழிபாடு கொள்கிறார்.

Koviloor Digital Library

எனவே தமிழக மக்கள் இவரைக் கொண்டாடுவதில் என்ன வியப்பு! நம் புலவர் பெருமக்கள் அவரைப் பரவி பாடிய தோத்திரங்கள் ஏராளம். அவற்றில் விநாயகர் அகவல் மிகச் சிறப்பாகப் போற்றப்படுகிறது. பெண்பால் பாடியது. ஒரு மூதாட்டி பாடியது. இதனைப்பாடி முடித்து வணங்கிய பின் தம் துதிக்கையில் அமர்த்தி நேராகத் திருக்கயிலையிலேயே சிவபெருமான் திருமுன்பாகக் கொண்டுபோய் நிறுத்திவிட்டார் ஸ்ரீ விநாயகக் கடவுள். அத்தகு மகத்துவம் வாய்ந்த இப்பாட்டு செய்யுளழகு மிக்கது. தத்துவப் பொலிவுடையது. அதனைச் சைவ சித்தாந்தச் செழும்புலவர் திரு. ச. கங்காதரன் அவர்கள் அற்புதமான உரைவிளக்கம் செய்திருக்கிறார்.

எல்லா மக்களும் பயன்பெறுமாறு நமது கண்மணி சென்னை ஃபுட்கியூர் நிறுவன அதிபர் நடராஜன், சைவ சித்தாந்த ரத்தினம், சைவ மெய்த் தொண்டர் அவர்கள் அன்புப் பரிசாக வழங்குகின்றார்.

அவருக்கு நம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ அழகாம்பிகை உடனாய ஸ்ரீ சிவகுருநாதசுவாமி தீர்க்காயுளும், திடதேகமும், சிந்திதமனோரத சித்தியும் அருளி தொழிலபிவிருத்தியும், சிவஞானத்தெளிவும், மனைமக்கள் நலமும், பொலிய வேண்டி நம் குருமூர்த்திகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

-சிவகுரு-

Koviloor Digital Library

வாழ்த்துரை
(மாசிலாமணி வயித்தியலிங்கன்)

ஸ்ரீ விநாயகரகவல் தோத்திரத்தில் சிறந்தது, சாத்திரத்திலும் சிறந்தது. ஞான பாதத்தினை விளக்குவது. எளிமையானது. இதனையே மலர்தூவி அருச்சிப்பதற்கு மந்திரமுமாகப் பெரியோர் பயன்படுத்துவர். நித்திய பாராயண நூலாகவும் விளங்குகின்றது.

ஆன்மாவின் எளிமையைத் திரும்பத்திரும்பச் சொல்லிப் பரம்பொருளின் அருட்பாங்கை உணர்த்துவது. பன்னிரண்டாம் சூத்திரத்தின் உட்கோளை 67-68ஆவது அடிகளில் புலப்படுத்திச் சைவ மெய்ப் பொருள் சாரமாய் விளங்குவது.

சித்தாந்தரத்தினமாகிய நமது நடராஜன் சென்னை ஃபுட்கியூர் அதிபர் இந்நூலை வெளியிடுகிறார். திரு. ச. கங்காதரன் அவர்கள் சைவ உலகில் தனிமாட்சிக்குரிய பேராசிரியர். அவர் விநாயகரகவலுக்கு ஒரு விளக்க உரை வழங்கியிருக்கிறார். அதனை நடராஜன் எனது ஞானப்புதல்வர் சிறிய பெரிய இந்நூலை அனைவருக்கும் அச்சிட்டு வழங்கி மகிழ்கிறார். அவருக்கும், அவர் மனைவி மக்களுக்கும் ஸ்ரீ மங்களாம்பிகை உடனாய ஸ்ரீ ஆதிகும்பேசப் பெருமான் நீடிய <u>வாணாள்</u> நிறை செல்வம், உடல் நலம், மனமகிழ்வாதிய எல்லாப் பேறுகளையும் வழங்கியருள்க.

சிவம்.

மா. வயித்தியலிங்கன்

Koviloor Digital Library

சித்தாந்தம் பதினான்கு நூல்களை நினைவுறுத்தும் பாடல்

உந்தி களிறே உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை வந்த - அருட்
பண்புவினா போற்றிக்கொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மை நெறி சங்கற்ப முற்று

பதினோராம் திருமுறையில் விநாயகர்

என்னை நினைந்து அடிமை கொண்டு என் இடர் கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரசு மகிழ் சோலை வியன்நாரையூர் முக்கண்
அரசு மகிழ் அத்திமுகத் தான்

- நம்பியாண்டார் நம்பி

சித்தாந்த நூல்களில் விநாயகர் வணக்கம்

கல்லால் நிழன்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே - சிவஞானபோதம்

ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய், ஐங்கரத்தன் ஆறு
தருகோட்டுஅம் பிறை இதழித் தாழ்சடையான்
தரும்ஒரு வாரணத்தின் தாள்கள்
உருகோட்டு அன்பொடும் வணங்கி ஓவாதே
இரவு பகல் உணர்வோர் சிந்தைத்
திருகு ஓட்டும் ; அயன் திருமால் செல்வமும் ஒன்றோ
என்னச் செய்யும் தேவே - சிவஞான சித்தியார்

கண்ணுதலும் கண்டக் கறையும் கரந்து அருளி
மண்இடையில் மாக்கள் மலம் அகற்றும் - வெண்ணெய் நல்லூர்
மெய்கண்டான் என்று ஒருகால் மேவுவரால் வேறு இன்மை
கைகண்டார் உள்ளத்துக் கண். - இருபா இருபது

ஒளியான திருமேனி உமிழ்தான மிகமேவு
களியார வரும் ஆனை கழல்நாளும் மறவாமல்
அளிஆளும் மலர்தூவும் அடியார்கள் உளம் ஆன
வெளியாகும் வலிதாய வினை கூட நினையாவே
- சிவப்பிரகாசம்

Koviloor Digital Library

விநாயகர் அகவல்

முனைவர். ச. கங்காதரன்
மதுரை காமராசர் பல்கலைக்கழக பேராசிரியர் (பணிநிறைவு)

சைவர்கள் விநாயகரை வணங்கி எத்தொழிலையும் செய்வதை நியமமாகக் கொண்டுள்ளனர். ஔவையார் அருளிய விநாயகர் அகவல், விநாயகர் போற்றி நூல்களில் முதன்மையானது ஆகும். இந்நூல் சைவசித்தாந்த உண்மைகளை மனங் கொள்ளும் வகையில் தெரிவிக்கிறது. ஆகவே விநாயகர் அகவலை நூலாசிரியராகிய ஔவையாரின் திருவடிகளை வணங்கி ஓதுபவர் வாழ்வில் சிறந்த அறிவு நலம் விளங்கப் பெறுவர்.

கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே

என்பது மெய்கண்டார் சிவஞான போதத்தில் அருளிய விநாயகர் வணக்கம். கல்லால மர நிழலில் இருந்து மேருமலையை வில்லாக உடைய சிவபெருமான் அருளுதற் பொருட்டு ஆன்மீக உண்மைகளைக் கேட்டு, சிந்தித்து, தெளியும் நலமுடைய நல்லார், பொல்லாப் பிள்ளையாரின் இரு திருவடிகளை வணங்குவர் என்பது இதன் பொருள். இப்பாட்டு இரு உண்மைகளை வெளிப்படுத்துகிறது.

* சிவபெருமான் அருள் வேண்டி நல்லார் விநாயகப் பெருமானை வணங்குவர். ஆகவே விநாயகர் சிவபெருமானின் வேறல்லர் என்பது தெளிவாகிறது.
* மேருமலையை வில்லாக உடையவர் என்னும் பொருளோடு மலைவு + இல்லார் எனப் பொருள் கொண்டு மலைவாகிய ஐயத்தை இல்லையாகச் செய்தவர் விநாயகப் பெருமான் என்னும் உண்மையும் விளங்குகிறது.

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து

என்னும் திருக்குறளின் கருத்துப்படி விநாயகர் அகவலைப் பொறுமையாகப் பொருள் உணர்ந்து ஓதி வந்தால், ஐயம் நீங்குதல் முதல் அனைத்து நலன்களையும் அடையலாம். மேலும், பிரணவப் பொருளின் வடிவாகத் திகழும் விநாயகர் யோகத்தை நமக்கு முற்றுப் பெறுமாறு செய்பவர்.

Koviloor Digital Library

சிவ தருமமாகிய சரியை, கிரியை வழிபாடு செய்து, அதன் பயனாகிய யோகத்தைப் பெற்று, யோக நிறைவின் பயனாகத் திருவருளால் நாம் ஞானத்தைப் பெறலாம். இவ்வாறு ஞானத்தைப் பயனாகத் தரும் விநாயகர் அகவலைப் பொருளுடன் காண்போம்.

1. சீதக் களபச் செந்தா மரைப்பூம்
2. பாதச் சிலம்பு பலஇசை பாடப்
3. பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
4. வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்

5. பேழை வயிறும், பெரும்பாரக் கோடும்
6. வேழ முகமும், விளங்குசிந் தூரமும்
7. அஞ்சு கரமும், அங்குச பாசமும்
8. நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்

9. நான்ற வாயும் நாலிரு புயமும்
10. மூன்று கண்ணும், மும்மதச் சுவடும்
11. இரண்டு செவியும், இலங்கு பொன்முடியும்
12. திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்

13. சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
14. அற்புதம் நின்ற கற்பகக் களிறே !
15. முப்பழம் நுகரும் மூஷிக வாகன !
16. இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்

17. தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
18. மாயாப் பிறவி மயக்க மறுத்தே,
19. திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்ப்
20. பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து

21. குருவடி வாகிக் குவலயந் தன்னில்
22. திருவடி வைத்துத் திறம் இது பொருள்என
23. வாடா வகை தான் மகிழ்ந்தெனக் கருளிக்
24. கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே

25. உவட்டா உபதேசம் புகட்டி என்செவியில்
26. தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
27. ஐம்புலன் தன்னை அடக்கு முபாயம்
28. இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்

Koviloor Digital Library

29. கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்
30. திருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
31. தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
32. மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே

33. ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
34. ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
35. ஆறா தாராத் தங்குச நிலையும்
36. பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே

37. இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
38. கடையிற் கழுமுனைக் கபாலமுங் காட்டி
39. மூன்றுமண்டலத்தின் முட்டிய தூணின்
40. நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

41. குண்டலி யதனிற் கூடிய அசபை
42. விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
43. மூலா தாரத்து மூண்டெழுகனலைக்
44. காலால் எழுப்புங் கருத்தறி வித்தே

45. அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
46. குமுத சகாயன் குணத்தையுங் கூறி
47. இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
48. உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்

49. சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
50. எண்முக மாக இனிதெனக் கருளி
51. புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
52. தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்

53. கருத்தினிற் கபால வாயில் காட்டி
54. இருத்தி முத்தி இனிதெனக் கருளி
55. என்னை அறிவித் தெனக்கருள் செய்து
56. முன்னை வினையின் முதலைக்களைந்தே

57 வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
58. தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
59. இருள் வெளி யிரண்டிற் கொன்றிட மென்ன
60. அருள் தரும் ஆனந்தத் தழுத்தி, என் செவியில்

Koviloor Digital Library

61. எல்லை இல்லா ஆனந்த தமளித்
62. தல்லல் களைந்தே, அருள்வழி காட்டிச்
63. சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
64. சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி

65. அணுவிற் கணுவாய் அப்பாலுக்கும் அப்பாலாய்க்
66. கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
67. வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
68. கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி

69. அஞ்சக் கரத்தின் அருள் பொருள் தன்னை
70. நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
71. தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
72. வித்தக விநாயக, விரைகழல் சரணே.

ஔவைப் பிராட்டியார் அருளிச் செய்தது விநாயகர் அகவல். விநாயகரைப் போற்றும் முறையில் அகவற்பாவால் அமைந்த நூலாதலால் அப்பெயர் பெற்றது. 72 வரிகள் கொண்டது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெள்ளையானை மீதேறியும், சேரமான் பெருமாள் நாயனார் குதிரை மீதேறியும் திருக்கைலாயம் சென்ற போது ஔவைப் பிராட்டியையும் அழைத்தனர். அவர் அவ்வமயம் விநாயகர் பூசை பண்ணிக் கொண்டிருந்தார். பூசையை முடித்துக் கொண்டு இந்த அகவலைப்பாட விநாயகர் அருள்கூர்ந்து அவரை அவர்கட்குமுன் கயிலைக்கு ஏற்றுவித்தார் என்பர். இந்நூல் விநாயகரைப் போற்றும் தோத்திர நூலாயினும் ஆங்காங்கே சித்தாந்தக் கூறுகள் காணப்படுகின்றன.

பதவுரை :

1. சீதக் களபம் - குளிர்ந்த கலவைச் சாந்தணிந்த
செந்தாமரைப்பூ - சிவந்த தாமரை மலர்போன்ற
2. பாதச் சிலம்பு - திருவடிகளில் அணியப் பெற்ற சிலம்புகள்
பலஇசைபாட (உம்) - பலவகை ஓசை கொண்டு ஒலிக்கவும்
4. வன்ன மருங்கில் - அழகிய இடையில்
3. பொன் அரை ஞாணும் - பொன்னாற் செய்யப்பெற்ற அரைக்கொடியும்
பூந்துகில் ஆடையும் - மெல்லிய வெண்பட்டாடையும்

Koviloor Digital Library

4. அழகு வளர்ந்து எறிப்பவும் - (கண்டார்க்குப்) புதிது புதிதாய் அழகு தோன்றி விளங்கவும்

5. பேழைவயிறும் - பெட்டி போன்ற பெரிய வயிறும்,
பெரும்பாரக்கோடும் - பெரிய பருத்த (ஒற்றைக்) கொம்பும்

6. வேழமுகமும் - யானை முகமும்
விளங்கு செந்தூரமும் - (அம் முகத்தில்) விளங்குகின்ற சிவந்த பொட்டும்

7. அஞ்சு கரமும் - ஐந்து கைகளும்
அங்குச பாசமும் - துதிக்கையிலுள்ள அமிர்தகலசமும் ஓரிரண்டு கைகளில் தங்கிய மோதகமும், ஒடிந்த கொம்பாகிய எழுத்தாணியும் தவிர, வேறிரண்டு கைகளில் விளங்கும் யானைத் தோட்டியும், பாசக்கயிறும் ஆகிய படைக்கலங்களும்

9. நான்ற வாயும் - கீழே தொங்குகின்ற வாயும்
நால் இரு புயமும் - நான்கு பெரிய தோள்களும்

10. மூன்று கண்ணும் - மூன்று கண்களும்
மும்மதச் சுவடும் - (கன்னமதம், கைமதம், கோசமதம் ஆகிய) மும்மதம் பொழிதலாகிய தழும்பும்

11. இரண்டு செவியும் - இரண்டு காதுகளும்
இலங்கு பொன்முடியும் - (தலையில்) விளங்குகின்ற அழகிய கிரீடமும்

12. திரண்ட முப்புரிநூல் - மூன்று புரிகள் சேர்ந்து முறுக்கப் பெற்ற பூணுலானது.
திகழ்ஒளி மார்பும் - விளங்குகின்ற ஒளியுள்ள மார்பும்

8. நெஞ்சில் குடிகொண்ட - (அடியாரது) நெஞ்சில் எப்பொழுதும் நிலைத்திருக்கிற
நீலமேனியும் - நீலநிறமுள்ள உடம்பும், (ஆகிய இவற்றோடு உருவத் திருமேனியில் விளங்கினும்)

13,14. சொல், பதம் கடந்த - சொல்லையும் பொருளையும் கடந்து அவற்றுக்கு அப்பால் உள்ள
துரிய மெய்ஞ்ஞானம் நின்ற - (உருவங்கடந்த நிலையில்) பேரொளியுடன் கூடிய மேலான தூய மெய்யறிவு நிறைந்த
அற்புத கற்பகக் களிறே - எவரும் அதிசயிக்கும் கற்பக விநாயகக் கடவுளே !

Koviloor Digital Library

15. முப்பழம் நுகரும் - வாழை, மா, பலா ஆகிய மூன்று கனிகளையும் உண்கின்ற

மூஷிக வாகன - பெருச்சாளியை ஊர்தியாக உடையவரே !

16. என்னை - (பக்குவம் அடைந்த) எளியேனை
இப்பொழுது - இச்சமயத்தில்
ஆட்கொள வேண்டி - அடிமையாகக் கொள்ளுதற்கு விரும்பி

21. குவலயந் தன்னில் - இந்நிலவுலகில்

17,21. எனக்குத் தாயாய் எனக்குப் பேரன்பு செலுத்தும் தாய்போல்பவனாய் (ஆய்-போல)

குருவடிவாகி எழுந்தருளி - அருட்குரவராய் முன்னே தோன்றி

24. கோடு ஆயுதத்தால் - (நின்கையிலுள்ள) கொம்பாகிய (மெய்ஞ்ஞானக்) கருவியால்

கொடுவினை களைந்தும் - (பேரின்பத்திற்கு) மாறுபட்ட உலக இன்பங்களைத் தேடுதலினின்று என்னை நீக்கியும்

19. திருந்திய முதல் ஐந்தெழுத்தும் - (மலத்துடன் விரவாது) ஒளியோடு விளங்கும் வேதாகமங்கட்கு முதலான வேட்டிப் பிரணவ ஐந்தெழுத்துக்களையும்

20,19. என் உளந்தனில் தெளிவாய்ப் பொருந்தவே வந்து புகுந்து(ம்) - எனது மனதில் தெளிவாய்ப் பதியுமாறு (மல இருள் நீங்கிய அருள் ஒளியுடன் வந்து கலந்தும்)

27. ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம் - செவி, மெய், கண், வாய், மூக்கு ஆகிய ஐம்பொறிகளையும், ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற புலன்களில் செல்லாது தடுக்கும் வழியை

28. இன்புறு கருணையின் இனிது எனக்கு அருளி(யும்) - யான் பேரின்பம் அடைதற்கு ஏதுவாகிய தனது பேருளினாலே இனிமையாக எனக்கு அறிவித்தும்

29. கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து (ம்) - நிலம் முதல் நாதம் ஈறாகிய 36 தத்துவக் கருவிகளும் ஒன்றன் பின் ஒன்றாய் ஒடுங்கிப் பின் தூவெளியிலும் அருளிலும் சிவத்திலும் ஒடுங்கிப் பேரின்பமுறும் கருத்தினைத் தெரிவித்தும்

34. ஐம்புலக் கதவை(யும்) - (செவி, மெய், கண், வாய், மூக்கு என்ற) ஐம்பொறிகளின் வழிகளையும்

Koviloor Digital Library

33. ஒன்பது வாயிலையும் - (கண் இரண்டு, செவி இரண்டு, மூக்கு இரண்டு, வாய் ஒன்று, குதம் ஒன்று, குறி ஒன்று ஆகிய) ஒன்பது உறுப்புக்களின் வழிகளையும்

ஒரு மந்திரத்தால் - ஒப்பற்ற ஓங்கார மந்திரத்தால்

34. அடைப்பது காட்டியும் - (புருடனாகிய சீவன் புறத்தே போகாது) தடுப்பதைக் காண்பித்தும்

35. ஆறு ஆதாரத்து - மூலதாரம், சுவாதிட்டானம், மணி பூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை ஆகிய ஆறு ஆதாரங்களிலும்

அங்குச நிலையும் - (சுழிமுனை வழியே பிராணவாயு செல்லுமாறு) யானைத் தோட்டிபோல் அதனை அடக்கும் நிலையினையும்

36. பேரா நிறுத்தி - நிலைபெயராமல் இருக்கச் செய்து,

பேச்சு உரை அறுத்து - பேசுகின்ற பேச்சை முற்றிலும் நீக்கி மௌனமாகச் செய்தும்

37. இடை பிங்கலையின் எழுத்து அறிவித்து - இடை கலைக்குரிய ஓரெழுத்து மந்திரத்தையும் பிங்கலைக் சூரிய ஓரெழுத்து மந்திரத்தையும் அறிவுறுத்தியும்

38. சுழிமுனை கடையில் கபாலம் காட்டியும் - சுழிமுனை நாடி முடிவில் அடையும் தலை ஒட்டிலுள்ள ஏழாஞ் சக்கரமாகிய சகஸ்ர சக்ரத்தைக் (பிரமரந்திரம்) காண்பித்தும்

39. மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின் - சூரியன் சந்திரன், அக்கினியாகிய மூன்று மண்டலங்களையும் சேர்ந்துள்ள வீணாத் தண்டிலிருந்து

40,41. நான்று எழுபாம்பின் - தொங்குகின்ற பாம்பைப் போன்ற

குண்டலி அதனில் கூடிய அசபை - குண்டலி சத்தியோடு சேர்ந்திருக்கிற (உரைக்கக் கூடாத) அம்ச மந்திரத்தை

40. நாவில் உணர்த்தி(யும்) - நாவில் எழுதி அறிவித்தும்

42. விண்டு எழுமந்திரம் - (அந்த அம்ச மந்திரத்திலிருந்து) வெளிப்பட்டு எழுகின்ற உரைக்கக் கூடிய ஓர் எழுத்து மந்திரத்தை

வெளிப்பட உரைத்தும் - வெளியே எனக்குக் கூறி உணர்த்தியும்

Koviloor Digital Library

43. மூலாதாரத்தில் - (ஆறு ஆதாரங்களில் அடிச் சக்கரமாகிய) மூலாதாரத்திலிருந்து மூண்டு எழு
கனலை - பற்றி எழுகின்ற விந்து அக்கினியை

44. காலால் எழுப்பும் - பூரக, ரேசக, கும்பக வாயுக்களினாலே (வீசி) எழுப்பும்,
கருத்து அறிவித்தும் - கருத்தை எனக்கு உணர்த்தியும்

47. இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும் - (ஆறு ஆதாரங்களில்) நடுநின்றியங்கும் கண்டச் சக்கரத்தின் பதினாறு இதழ்களோடு கூடிய நிலையினையும்.

48. உடற்சக்கரத்தின் உறுப்பையும் காட்டி(யும்) - உடலாகிய இயந்திரத்திலுள்ள உறுப்புகள், ஒன்று வேறு ஒன்றைச் செலுத்தி நிற்கும் நிலையை யான் அறியக் காண்பித்தும்

45. அமுத நிலையும் - (அக்கினியானது சுழிமுனை வழியே தலையில் பிரம்மரந்திரத்திலுள்ள மண்டலம் வரை சென்று) அமுதத்தை ஆக்கும் நிலையினையும்
ஆதித்தன் இயக்கமும் - சூரியன் (உடலில் சந்திரனோடும் அக்கினியோடும் சேர்ந்து தூவெளியில் அடங்கி) இயங்குதலையும்

46. குமுத சகாயன் குணத்தையும் - ஆம்பல் பூவிற்குத் தோழனாகிய சந்திரன் (சூரியனில் அடங்கியிருக்கும்)
குணத்தையும் கூறியும் - அறிவித்தும்

49. தூல சண்முகமும் - நீர் (விநாயகர்) ஆறுமுகங்களுடன் பருப்பொருளாய் எங்கும் நிறைந்திருக்கும் தன்மையும்
சூக்க சதுர்முகமும் - நீர் (விநாயகர்) நான்கு முகங்களுடன் கூடி நுண்பொருளாய் எங்கும் நிறைந்திருக்கும் தன்மையும்

50. எண்முகமாக - யான் நினைக்கிற (தியானிக்கும்) முகங்களோடு கூடிய உருவங்களாக
எனக்கு இனிது அருளி(யும்) - எனக்கு இனிமையாக உரைத்தருளியும்

51. புரியட்ட காயம் எனக்குப் புலப்பட - மிக்க நுண் பொருளான உடலின் தன்மை எனக்கு நன்கு விளங்குமாறு

Koviloor Digital Library

52. தெரிஎட்டு நிலையும் தெரிசனப்படுத்தியும் - (அவ்வுடலை ஆக்குவனவாகிய தூலபூதம், சூக்குமபூதம், ஞானேந் திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, அந்தக்கரணம் நான்கு, குண தத்துவம் ஒன்று, மூலப்பகுதி ஒன்று, கலாதி ஐந்து ஆகிய) எட்டுத் தொகுதி உறுப்புகளின் நிலையையும் பிரித்துக் காண்பித்தும்

32. மலம் ஒரு மூன்றின் மயக்கம் அறுத்து(ம்) - ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களின் பிணிப்பை முற்றிலும், நீக்கியும்

18. மாயாப் பிறவி மயக்கம் அறுத்து(ம்) - மாயா காரியங்களாலாகிய உலகில் வந்து பிறக்கும் ஆசையை அகற்றியும்

31. தலம் ஒரு நான்கும் எனக்குத் தந்தருளியும் - (சரியையாகிய உருவம், கிரியையாகிய அருவுருவம், யோகமாகிய அருவம், ஞானமாகிய அகண்ட வெளி ஆகிய) நான்கு இடங்களிலும் பெறத்தக்க மெய்ஞ்ஞானத்தை உணர்த்தியருளியும்,

63. சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி - (அகண்டமாகிய) உலகில் சூக்கும பூதமாகிய சத்தத்தை இயக்கி) அச்சத்தத்துள் பரந்திருக்கும் சதாசிவ மூர்த்தியை எனக்குக் காண்பித்தும்

64. சித்தத்தினுள்ளே சிவலிங்கங் காட்டி - (பிண்டமாகிய உடலில்) அடியார் உளத்தில் நிறைந்துவிளங்கும் சிவலிங்கமாகிய சதாசிவ மூர்த்தியைக் காண்பித்தும்
என் செவியில் - என் காதுகளில்

25. உவட்டா உபதேசம் புகட்டி(யும்) - இனிய உபதேச மொழிகளை அறிவுறுத்தியும்

26. தெவிட்டாத ஞானத் தெளிவைக் காட்டியும் - பேரின்பம் அடைதற்கேதுவாகிய தெளிந்த அறிவை யானறியக் காண்பித்தும்
திறம் இது பொருள் என - உறுதியாக நீரே (விநாயகரே) உண்மைப் பொருள் என்று கூறி

22. திருவடி வைத்து - நினது திருவடிகள் இரண்டையும் என் தலைமீது வைத்துத் தீக்கை செய்து

23. வாடாவகைதான் மகிழ்ந்து எனக்கு அருளி - யான் (இனிப்பிறவித் துன்பத்தால்) வருந்தா வண்ணம் மகிழ்வுடன் எனக்குக் கருணை செய்து

Koviloor Digital Library

65. அணுவிற்கு அணுவாய் - (அணு ஓர் அண்டம் என்னும் படி) அவ்வணுவினுள் அணுவாகப் பரந்து வீற்றிருந்தும்

அப்பாலுக்கு அப்பாலாய் - (அண்டம் ஓர் அணு என்னும்படி) ஏழு அண்டங்களையும் கடந்து அதற்கும் அப்பாற் பெரிதாய்ப் பரந்து வீற்றிருந்தும்

66. கணுமுற்றிநின்ற கரும்பு - கணுக்கள் முற்றி நன்கு விளைந்த கறுப்பஞ்சாறு போலும் பேரின்பத்தை

உள்ளே காட்டியும் - என்னுள்ளே அத்துவிதமாய் நின்று உணரச் செய்தும்

53. கருத்தினில் - எனது உள்ளக் கருத்தின்கண்,
கபால வாயில் காட்டி - தலையோட்டுத் துவாரவழியே மேல் உள்ள துவாதசாந்த வெளியைப் புலப்படுமாறு காண்பித்து

54. இருத்தி - (என்னைத் துவாத சாந்தத்தில்) இருக்கச் செய்து
எனக்கு முத்தி இனிது அருளியும் - எனக்குச் சாலோக இன்பத்தை இனிமையாக நல்கியும்

30. இருள் கடிந்து இருவினை தன்னை அறுத்து - ஆணவம் கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் போக்கி (அவற்றால் வரும்) நல்வினை தீவினைப்பயன்களை முற்றிலும் கெடுத்து

56. முன்னை வினையின் முதலைக்களைந்து - முன் செய்த நல்வினை தீவினைகட்குக் காரணமாயிருந்த ஆணவ மலப் பிணிப்பினை அகற்றி

55. என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து(ம்) - என்னை அறிவு வடிவினன் என்று அறிவித்து எனக்குச் சாமீப இன்பத்தை நல்கியும்

57,58. வாக்கும் மனமும் இல்லா - (பாசஞான, பசு ஞானங்களால் அறியப்படாது பதிஞானத்தாலேயே இறைவன் அறியப்படுதலின்) பாசஞானமும் பதிஞானமும் அல்லாத

மனோலயம் தேக்கியே - (பதிஞானத்தை உணரும்) எனது மனவெளியில் (பேரின்பமாகிய அமுதத்தை யான் நுகருமாறு) நீர் (விநாயகர்) நிறைந்திருந்தது

என்றன் சிந்தை தெளிவித்து - அதனால் எனதுமனம் (சிவமேயாகும்படி) தெளிவித்து

Koviloor Digital Library

59. இருள்வெளி இரண்டுக்கு ஒன்று இடம் என்ன - இருளைச் சார்ந்தபோதும் ஒளியைச் சார்ந்தபோதும் அவற்றின் மயமாய் அவ்விரண்டிற்கும் கண் இடமானாற்போல்

60. என் செவியில் அருள்தரும் ஆனந்தத்து அழுத்தியும் - (உலகைச் சார்ந்து அறியாமை மயமாகவும், சிவத்தைச் சார்ந்து சிவமயமாகவும் ஆதற்குரிய) எனது செவியில் ஞானம் உணர்த்திச் சாரூப இன்பத்தில் என்னைத் திளைக்கச் செய்தும்

62. அருள்வழி காட்டி - அருள் வழியாகிய சன்மார்க்க நெறியை எனக்குக் காண்பித்து

அல்லல் களைந்து - அதனால் எனது பிறவித்துயரை அகற்றி

61. எல்லை இல்லா ஆனந்தம் அளித்து(ம்) - (யான் உலகில் சீவன்முத்தராய் வாழும்போது என்னைப் பிராரத்துவ மலவாதனை தாக்காதபடி)

67. வேடமும் நீறும் விளங்க நிறுத்தி - மெய்யடியாரது திருவேடத்தையும், திருநீற்றையும் உலகில் நிலைத்திருக்கச் செய்து

68. கூடும் மெய்த்தொண்டர் குழாத்துடன் கூட்டி(யும்) - ஒன்று கூடி ஆனந்தக் களிப்படையும் மெய்யடியார் கூட்டத்தில் என்னையும் சேர்த்தருளியும்

69. அஞ்சு அக்கரத்தின் அரும்பொருள்தன்னை - அஞ்செழுத் தில் அடங்கியுள்ள அறிதற்கரிய பதி பசு பாச உண்மைகளை

70. நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்து(ம்) - எளியேனது மனக்கருத்தில் நிலையாக விளங்குமாறு உணர்த்தியும்

71. தத்துவ நிலையைத் தந்து - உண்மை நிலையை விளக்கி

எனை ஆண்ட - என்னை அடிமையாக ஆட்கொண்டருளிய

72. வித்தக விநாயக - பேராற்றல் வாய்ந்த விநாயகக் கடவுளே

விரைகழல் சரணே - அருள் மணமுடைய நினது திருவடிகளே எனக்குப் புகலிடமாக உள்ளது. (யான் அத்திருவடிகளையே இடையறாது நினைப்பேன்)

குறிப்பு : பத உரையில் வளைகோடுகளுக்கு (Brackets) வெளியேயுள்ள சொற்களே பாட்டிலுள்ள சொற்களின் பொருளாம். வளைகோடுகளின் உள்ளேயுள்ள சொற்களும் சொற்றொடர்களும் பாட்டிலுள்ள சொற்களைத் தொடர்ச்சியாய் விளக்குவதற்கு வருவித்துரைக்கப்படுவன.

Koviloor Digital Library

இடதுபுறத்தில் எழுதப்பட்டிருக்கும் வாசகம் தொடர்ச்சியாக ஓதப்பெறின், உரைநடையாகும் (Prose order) - வலதுபுறத்தில் எழுதப்பட்டிருக்கும் வாசகம் தொடர்ச்சியாக ஓதப்பெறின் பொழிப்புரையாகும். இப்பதவுரை திரு. மா.வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள் எழுதிய உரையைப் பின்பற்றி அமைக்கப்பட்டது.

விநாயகர் அகவல் உணர்த்தும் சில ஆன்மீகச் செய்திகள்

சைவர்கள் விநாயகரை உணரும் முறை

'இறைவன் எல்லாம் வல்லவன்' என்பது உண்மை நூல்களின் ஒத்த துணிபு. ஆகவே அவனது வல்லமை அளவிறந்ததென்பது பெறப்படும். எல்லாம் வல்லனாய் இருத்தல் என்பது எல்லாவற்றையும் அறியவும் எல்லாவற்றையும் செய்யவும் வல்லனாய் இருத்தல் என்பதைக் குறிக்கும். அங்ஙனம் அறியவும் செய்யவும்படும் பொருள்கள் அளவிறந்தனவாகலின் அவைபற்றி அவனது அறியும் ஆற்றலும் செய்யும் ஆற்றலும் அளவிறந்தனவாதல் வேண்டும் என்பது கூறாமலே விளங்கும். ஆகவே, இறைவனது ஆற்றல் அளவிறந்த ஆற்றல் என்பது இனிது புலப்படும். இவ்வளவிலா ஆற்றலாகிய குணமே இறைவனது எண்குணங்களைக் கூறுமிடத்து 'அநந்தசக்தி' அல்லது 'முடிவிலாற்றல்' எனக் கூறப்படும்.

இவ்வளவிலா ஆற்றலால் இறைவன் எண்ணிறந்த பொருள்களை அறிந்தும், எண்ணிறந்த செயல்களைச் செய்தும் நிற்குங்கால், எண்ணிறந்த நிலைகளை உடையவனாகிறான். அதனால் தன்னியல்பில் ஒரு பெயர், ஓர் உருவம் ஒன்றும் இல்லாதவனாகிய அவன், தன்னின் வேறாகிய உயிர்களையும் உலகத்தையும் இயக்கி நிற்கும் பொது இயல்பில் ஆயிரம் திருநாமமும், திருவுருவமும், திருச்செயல்களும் உடையவனாகிறான். இதனையே

'ஒருநாமம் ஓர் உருவம் ஒன்றுமிலாற் காயிரம்
திருநாமம்பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ'

என்று மணிவாசகர் அருள்கிறார்.

இங்ஙனம் இறைவன் எண்ணிறந்த உருவும், பெயரும், செயலும் உடையனாதற்குக் காரணம், அவனது எண் குணங்களில் ஒன்றாகிய பேரருள் உடைமையேயாம். எனவே இறைவன் உயிர்கள்மேல் வைத்த கைம்மாறற்ற கருணையினாலே அளவிறந்த உருவங்களையும்,

Koviloor Digital Library

பெயர்களையும், செயல்களையும் உடையவனாய் நின்று, அவைகட்கு நலம் செய்வான். இது கருதியே "நானாவித உருவாய் நமை ஆள்வான்" என்று சம்பந்தப் பெருமான் அருளிச் செய்தார். (திருமுறை 1:9:5)

இனி இறைவன் தனது அளவற்ற ஆற்றல்களிற் சிலவற்றைப் பிறரிடத்துப் பதிவித்து அவர்களால் சிலவற்றைச் செய்வித்தலும் உண்டு. அந்நிலையில் அவர்கட்கு வரும் வடிவு முதலியன, இறைவனது உபசார வடிவு முதலியனவாகக் கூறப்படும்.

இறைவனது எண்ணிறந்த ஆற்றல்களில் இடையூற்றை ஆளும் ஆற்றல் ஒன்று. அவ்வாற்றல் முனைந்து நிற்க விளங்குபவரே விநாயகக் கடவுள். இவர் இத்தன்மையுடையவரா யிருத்தலின் யாவராலும் முதற்கண் வழிபடப் படும் கடவுளாயினார்.

எவரேனும் யாதாயினும் ஒரு செயலை மேற்கொண்டு அதன்கண் முயலுங்கால், அதற்கு இடையூறு வருதல் இயல்பு.

அவ்விடையூற்றுக்குக் காரணம் அவரது வினையே. அவ்வினை இறைவன் வழிபாட்டினால் நீங்குவதாகும். ஆகவே ஒரு செயலைத் தொடங்குங்கால், அஃது இடையூறின்றி இனிது முற்றுதற்பொருட்டு இறைவனை வணங்கித் தொடங்குதல் சைவ மரபு. அங்ஙனம் வணங்குங்கால், இறைவனை இடையூறு நீக்குபவனாகக் கருதியே வணங்க வேண்டுதலின், அவ்விடத்தில் இறைவன் இடையூறு நீங்குபவனாய் இருந்தே தன்னை வணங்குவார்க்கு அருள் செய்வான். அவ்வாறிருந்து அருள் செய்யும் நிலையே 'விநாயகப்பெருமான்' எனப்படும் நிலை.

உருவ வழிபாட்டின் தத்துவம்

இந்திய மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக உருவ வழிபாடு செய்து வருகின்றனர். உருவ வழிபாட்டின் தத்துவத்தை இந்தியாவில் பிரம்மசமாஜத்தினர், கிறித்தவர், இஸ்லாம் சமயத்தினர் ஏற்பதில்லை.

உருவ வழிபாடு என்னும் சொற்றொடர் உருவத்தை வழிபடுதல், உருவத்தில் வழிபடுதல் என்று இருவகையில் பொருள்தருமாறு பிரிக்கும்படி அமைந்துள்ளது. தொடக்கத்தில் திருவுருவத்தின் அழகு பக்தனை ஈர்க்கிறது. செண்பக விநாயகர் கோயிலில் உள்ள விநாயகர் திருவுருவத்தின் அழகு அடியவனை முதற்கண் அழைக்கிறது. அடியவன் வழிபாடு உண்மையோடும் உறுதியோடும் திகழ வேண்டும்.

Koviloor Digital Library

எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளே இங்கு செண்பக விநாயகர் வடிவில் திகழ்ந்து நம்மைக் காத்து வருகிறது என்ற நம்பிக்கையை வாழ்வில் வருகிற கஷ்டங்கள், தொல்லைகளுக்கிடையில் உறுதியோடு கடைப்பிடித்து வாழவேண்டும். சில நாட்கள் வழிபட்டு வேண்டிய பலன் உரிய நேரத்தில் கிடைக்கவில்லையென்று நாமே அரைகுறையாக முடிவு செய்து வேறு ஒரு திருவுருவத்தை வழிபடச்செல்லக்கூடாது. இந்நிகழ்ச்சியை ஓர் உதாரணம் மூலம் விளக்கலாம்.

ஒருவர் கிணறு தோண்ட விரும்புகிறார். 60 அடி ஆழம் தோண்டித் தண்ணீர் கிடைக்கவில்லையென்று அறிந்து, பக்கத்தில் 60 அடி ஆழம் மீண்டும் தோண்டுகிறார். இவ்வாறு ஐந்து முறை தோண்டுகிறார் எனில், ஐந்து இடத்தில் தோண்டுவதால் (300 அடி ஆழம் ஐந்து இடங்களில் தோண்டுவதால்) நமக்குத் தண்ணீர் வராமல் போக வாய்ப்பு இருக்கிறது. இந்த அன்பர் தோண்டுவதற்கு முன்பு நீளயோசித்துப் பின் ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து அந்த இடத்தில் தொடர்ந்து தோண்டுவதால் 300 அடிக்கு முன்போ, 300 அடி ஆழத்தையொட்டியோ தண்ணீர் கிடைக்க வழியுள்ளது. இதுபோலத்தான் திருவுருவத்தைத் தேர்ந்தெடுக்கும்முன் நமக்கு உரிமை உள்ளது. திருவுருவைத் தேர்ந்து வழிபடத் தொடங்கிவிட்டால், அத்திருவுருவத்தையே தொடர்ந்து வழிபட்டு வருவதால் நம் வாழ்வு தெளிவுடன் அமைய வாய்ப்பு இருக்கிறது.

வழிபாடு உறுதியுடன் உண்மையோடு அமைய வேண்டும். திருவள்ளுவர் கூறுகிற அறவாழ்க்கை நம் சமய வாழ்வுக்கு அடிப்படையாக அமைய வேண்டும். அறத்துப்பாலின் முதல் நான்கு அதிகாரங்களான கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல், அறத்துப்பாலின் இறுதி ஐந்து அதிகாரங்களான நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல், ஊழ் ஆக ஒன்பது அதிகாரங்களின் பிழிவாகவே சைவ சித்தாந்தம் அமைகிறது.

நம் வழிபாடு உண்மையாக அமையவேண்டின் திருவள்ளுவர் கூறுகிற ஆன்மீகச் செய்திகளை முன்னுக்குப் பின் முரண் இல்லாமல் புரிந்து கொள்ள வேண்டும். ஊழே வலிமையானது என்று திருவள்ளுவர் ஓரிடத்தில் கூறுகிறார். தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சியானது தன் பயனைக் கொடுத்தே தீரும் என்று முயற்சியின் வலிமையை வேறு இடத்தில் கூறுகிறார். இவ்விரண்டு செய்திகளையும் முரண்நீக்கிப் புரிந்து கொண்டால்தான் ஆன்மீக வாழ்வு அமைதியாகச் சிறக்க வாய்ப்பு ஏற்படும்.

Koviloor Digital Library

உழைப்பு என்றும் வீண்போகாது என்பது திருவள்ளுவரின் அசைக்க முடியாத நம்பிக்கை, உழைப்பு செய்த நாளே அல்லது செய்த பொழுதே பயன் தாராமல் போகலாம். ஆனால் உழைப்பு என்றும் வீண்போவதில்லை என்ற உண்மையை உணர்ந்தால்தான் சைவத்தில் வினை அல்லது கருமம் பற்றிக் கூறுவதைப் புரிந்து கொள்ள முடியும்.

கன்மம் என்பது செயல், செயலின் பயன் ஆகியவற்றைக் குறிக்கும். செயல் செய்வதற்கு முன்பு நமக்கு உரிமை இருக்கிறது. ஒருவகையில் செய்யலாம், வேறு வகையில் செய்யலாம், செய்யாமல் இருக்கலாம். ஆனால் மூன்றில் ஒரு வகையை நாம் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டி உள்ளது. செயல்செய்யாமல் இருப்பதும் சில சமயம் சிறந்த வழியாக இருக்கும். வேகவேகமாகத் தவறான செயலைச் செய்து பின்பு துன்பப்படுவதைவிட, பொறுமையுடன் இருப்பது, செயல் செய்யாமல் இருப்பது பின்னால் வரும் தீமைகளைத் தவிர்க்க உதவியாக இருக்கும். இக்கருத்தையே,

எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று. - (குறள் 655)

என்று திருவள்ளுவர் கூறுகிறார். இக்குறளின் மையக்கருத்து, பின்னால் ஏன் செய்தோம் என்று வருந்துவதற்குக் காரணமான செயல்களை நாம் செய்யக்கூடாது. ஒரு தடவை செய்ய நேரிட்டாலும், பின் செய்யவே கூடாது என்பதாம்.

ஓர் ஆன்மாவின் வினையைச் சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என்று மூன்றாகப் பகுப்பர். ஓர் ஆன்மா செய்த மொத்த வினைகளின் கூட்டத்தை சஞ்சிதம் என்பர். சஞ்சிதத்தின் ஒரு பகுதி இந்தப் பிறவியில் அனுபவத்துக்கு வருவது பிராரப்தம் என்பர். பிராரத்தத்தை நுகரும்போது நாம் முன்பு செய்த வினையின் பயனைத்தான் சிவபிரான் தற்போது ஊட்டுகிறார் என்பதை மறந்து விருப்புவெறுப்புடன் செயல்படுகிறோம். இவ்வாறு விருப்பு, வெறுப்புக் காரணமாகக் கருணை மயமாக உள்ள இறைவன் செய்யும் செயல்களின் நோக்கத்தை உணராமல் நாம் செய்யும் செயல்கள் புதிய செயல்களைத் தோற்றுவிக்கின்றன. இவ்வாறு புதிதாகத் தோன்றும் செயல்களே, சுருங்கச் சொல்ல வேண்டுமெனில் நம் முட்டாள் தனத்தினால் நாம் செய்யும் செயல்களே, ஆகாமியம் எனப் பெயர் பெறும்.

Koviloor Digital Library

சிவபிரான் அருளைப் புரிந்து கொள்வதன் மூலம் புதிதாக வருகிற வினைகளை நாம் தவிர்க்க வேண்டும். இவ்வாறு புதிதாக வரும் வினைகளைத் தவிர்க்க இறைவழிபாடும் நல்லொழுக்கமும் தேவை. நாம் செய்யும் செயலுக்கு நல்ல பயன் விளைந்தாலும் அதற்கு முன்பு செய்த செயலின் பயனைத் தரும் இறைவனது அருளே என எண்ண வேண்டும். நாம் செய்யும் செயலுக்குத் தீமையான பயன் விளையும் போது முன்பு செய்த செயலின் பயனைத் தரும் இறைவன் அருளே அது என எண்ணவேண்டும். சிவபிரான் கருணையே நல்ல செயலின் நன்மையையும், தீயசெயலின் தீமையையும் நம் பழைய செயல்களுக்கு ஏற்பத் தருகிறது என்று திடமாக நம்பும் சூழ்நிலை ஒரு காலகட்டத்தில் சிவபிரான் அருளால் நமக்கு வாய்க்கிறது. இந்நிலையே இருவினை ஒப்பு என அழைக்கப்படும். உயிரானது இந்நிலையில் மலமானது நீங்கப்பெறும் நிலையைப் பெறுகிறது. இதுவே மலபரிபாகம் என அழைக்கப்படும். அவை மலம் நீங்குதற்குரிய தன்மையை ஆன்மா பெறும்போது இறைவனது சக்தி மலம் நீங்கிய ஆன்மாவில் வீழ்கிறது. இந்நிலை சத்திநிபாதம் எனப்படும். ஒரு கூட்டத்தில் கற்கள் வந்தால், கூட்டத்தில் உள்ளவர்கள் எவ்வாறு வெகுவிரைவாக ஓடி ஒளிவாரோ அதுபோல இறைவன் சக்தி பதியும்போது மல சத்திகள் ஓடி ஒளிகின்றன. இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் மூன்றும் முறையே ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்கிறது.

இருவினையின் தன்மையை நாம் முழுமையாக அறிய முடியாது. “போகமார்த்த பூண்முலையாள்” என்று தொடங்கும் திருஞான சம்பந்தரின் திருநள்ளாற்றுப் பதிகத்தில் வரும் 9வது பாடல் :

உண்ணலாகா நஞ்சு கண்டத்து உண்டு உடனே ஒடுக்கி
அண்ணலாகா வண்ணல் நீழல் ஆரழல்போல் உருவம்
எண்ணலாகா உள்வினையென்று எள்க வலித்திருவர்
நண்ணலாகா நம்பெருமான் மேயது நள்ளாறே

இப்பாடலில் திருஞான சம்பந்தர் இருவினையின் தன்மைகளை (சிற்றறிவுடைய) நம்மால் முழுதும் அறிய முடியாது என்று கூறுகிறார். வினைவரும் போது நமக்குத் தெரியாமல் செய்து விடுகிறோம். வினை முடிந்தபிறகுதான் - நாம் செயலின் தீயவிளைவுகளை அறியும் போதுதான் - நாம் செயலை வேறு வகையில் அமைத்திருக்கலாமோ என்னும் எண்ணம் தோன்றுகிறது. இவ்வாறு பல ஆன்மீகச் செய்திகளையும் விநாயகர் அகவல் மூலம் ஔவைப் பெருமாட்டியார் நமக்கு அருள்கிறார்.

KOVILOOR ANDAVAR
34547
LIBRARY

Koviloor Digital Library

Wellness Shoppe

... Shop 4 ur Wellness

9841164159

Koviloor Digital Library



திண்டுக்கல் சிவபுர ஆதீனம் முதலாவது குருமகா சன்னிதானம்

ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.